மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 38, மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன். ஜெயசீலன், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.*

38—

கம்பிவட ஊர்தி

***67647—திரு. பொன். ஜெயசீலன்:** *மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கூடலூர் தொகுதி, ஊசிமலை முதல் தொரப்பள்ளி வரை கம்பிவட ஊர்தி வசதி செய்துதர அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கா. ராமசந்திரன், சுற்றுலாத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

கூடலூர் தொகுதிக்குட்பட்ட ஊசிமலை பகுதியிலிருந்து தொரப்பள்ளி வரை கம்பிவட ஊர்தி அமைப்பதற்கு சாத்தியக்கூறுகள் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன். ஜெயசீலன் அவர்கள்.*

திரு. பொன். ஜெயசீலன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணக்கம். எனது கூடலூர் சட்டமன்றத் தொகுதி, ஆண்டுதோறும் கேரளா மற்றும் கர்நாடகாவிலிருந்து உதகைக்குச் செல்லக்கூடிய 10 இலட்சத்திற்கும் மேற்பட்ட சுற்றுலாப் பயணிகள் பயன்படுத்தக்கூடிய ஒரு வழித்தடமாக இருக்கின்றது. எனவே, மாண்புமிகு முதல்வர் அவர்களின் 'உங்கள் தொகுதியில் முதலமைச்சர்' என்ற சிறப்புத் திட்டத்தின்கீழ் நான் கொடுத்த 10 கோரிக்கைகளில் 8–வது கோரிக்கையாக, கூடலூர் ஊசிமலை பகுதியிலிருந்து தொரப்பள்ளி வரை கம்பிவட ஊர்தி, அதாவது* rope car *அமைத்துத் தரப்படுமா என்ற கேள்வியை நான் எழுப்பியிருந்தேன்.*

முற்பகல் 11–05

அதன் அடிப்படையில் இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின்கீழ் செயல்பட்டு வரக்கூடிய National Highways Logistics Management Limited *என்ற நிறுவனத்தின் வாயிலாக*

2024 பிப்ரவரி 21]

இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து ஆய்வதற்காக டெல்லியிருந்து பொறியாளர்கள் இரண்டு முறை வந்து இந்தத் திட்டம் குறித்து ஆய்வு செய்து சென்றிருக்கிறார்கள். கூடலூர் பகுதியில் தேயிலையை மட்டுமே நம்பியிருக்கக்கூடிய மக்களின் வாழ்வாதாரம் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கின்றது. எனவே, சுற்றுலாவை மேம்படுத்துவதன் வாயிலாக இந்தத் திட்டத்தைச் செயல்படுத்தினால் நூற்றுக்கணக்கான, ஆயிரக்கணக்கான மக்களின் வாழ்வாதாரம் மேம்படும் என்ற வகையில் இந்தத் திட்டத்தினை, National Highways Logistics Management Limited *இரண்டுமுறை வந்து ஆய்வு செய்து அதன் சாத்தியக்கூறுகள் குறித்த அறிவிப்பும் செய்துள்ள நிலையில், இதனைச் செயல்படுத்துவதற்கு அரசு தகுந்த முயற்சிகளை மேற்கொள்ளுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கா. ராமசந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேரளா மற்றும் கர்நாடக மாநிலத்திலிருந்து உதகைக்குச் செல்லும் சுற்றுலாப் பயணிகள் அனைவருமே கூடலூர் பகுதியிலுள்ள ஊசிமலைப் பகுதிக்கு வந்து செல்வது வழக்கம். ஊசிமலைப் பகுதி வனத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ளது. கூடலூர் தொகுதிக்குட்பட்ட ஊசிமலை முதல்* Silver Cloud estate *வரை கம்பிவட ஊர்தி ஏற்படுத்துவதற்கு சாத்தியக்கூறு அறிக்கை தயாரிக்க தேசிய நெடுஞ்சாலை தளவாட மேலாண்மை நிறுவனத்தால் (*National Highways Logistics Management Limited*) மாண்புமிகு உறுப்பினர் கூறியவாறு ஏற்கெனவே பணிகள் மேற்கொள்ளப்பட்டன. இந்நிலையில், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறையின் அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் தலைமையில், 27-12-2023 அன்று நடைபெற்ற கூட்டத்தில் தேசிய நெடுஞ்சாலைகள் தளவாட மேலாண்மை நிறுவனத்தாரால் (*NHLML*) ஊசிமலை முதல்* Silver Cloud estate *வரை கம்பிவட ஊர்தி அமைப்பதற்கு சாத்தியக்கூறு இல்லை என்ற அறிக்கை தரப்பட்டது. எனவே, அந்த இடத்தில் கம்பிவட ஊர்தி அமைப்பதற்கு வாய்ப்பில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன். ஜெயசீலன் அவர்கள்.

திரு. பொன். ஜெயசீலன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது கூடலூர் சட்டமன்றத் தொகுதியில் அமைந்துள்ள தேவாலா என்ற பகுதியில் அரசு தோட்டக்கலைத் துறைக்குச் சொந்தமாக சுமார் 200 ஏக்கர் நிலம் இருக்கின்றது. இந்த நிலத்தில் வெறும் 38 பேர்கள் மட்டுமே தற்போது பணிபுரிந்து கொண்டிருக்கின்றார்கள். 200 ஏக்கர் பரப்பளவு இந்த நிறுவனத்திற்குச் சொந்தமாக இருக்கின்றது. எனவே, அவ்வளவு நிலம் இருந்தும் அங்கே எந்தவிதமான பணிகளும், வேலைவாய்ப்பும் வழங்கப்படாத காரணத்தால், அந்தப் பகுதியில் இருக்கக்கூடிய சிற்றூர்களான தேவாலா, நாடுகாணி, பொன்னூர், கீழ்நாடுகாணி போன்ற 5 கிராமங்களைச் சார்ந்த நூற்றுக்கணக்கான மக்கள் வேலைவாய்ப்பும், பொருளாதார மேம்பாடும் அடைவார்கள் என்ற அடிப்படையில், அங்கு ஒரு நீர்ச்சறுக்குப் பூங்கா அமைக்க வேண்டும் என்ற கோரிக்கையினை நான் வைத்திருந்தேன். அதன் அடிப்படையில், கடந்த 2022–2023 ஆம் நிதியாண்டில் அப்பகுதியில் ஒரு பூங்கா அமைப்பதற்காக ரூபாய் 3 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டதாக மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். தற்போது, அந்தப் பகுதியில், சுற்றுலாத் துறை சார்ந்த திட்டத்தினைச் செயல்படுத்துவதற்கு வனத் துறையினர் ஆட்சேபம் தெரிவிப்பதாக எனக்குத் தகவல் கிடைத்திருக்கிறது. அந்தப் பகுதி மக்களுக்கு பெரும் பொருளாதார மேம்பாட்டினை வழங்கக்கூடிய இந்தச் சிறப்புத் திட்டத்தினைச் செயல்படுத்துவதற்கு வனத் துறையினர் யானை வழித்தடம் என்பதால் ஆட்சேபம் தெரிவிப்பதாகத் தெரிவிக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எப்படிப்பட்ட நல்ல திட்டங்களைக் கொண்டு வந்தாலும் வனத் துறையினர் ஏதாவது ஒரு காரணத்தைக் காட்டி அதை நிறுத்துவதற்கான முயற்சியில் ஈடுபடுவதோடு, பொருளாதார மேம்பாடு அடைவதற்கு தடைக்கல்லாக எங்களுடைய பகுதியிலே இருக்கிறார்கள். எனவே, தயவுகூர்ந்து அந்த 3 கோடி ரூபாய் திட்டத்தை அங்கே செயல்படுத்துவதற்கும், அந்தப் பகுதியினை வளப்படுத்தி சுற்றுலாத் தலமாக மாற்றி நூற்றுக்கணக்கான மக்கள் வாழ்வு மேம்படவும் அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

2024 பிப்ரவரி 21]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கா. ராமசந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி வனத் துறை அமைச்சர் அவர்களிடம் கேட்க வேண்டிய கேள்வி. நீங்களே சொல்கிறீர்கள். 3 கோடி ரூபாய் சுற்றுலாத் துறைமூலம் நிதி ஒதுக்கீடு செய்து, அங்கு பணிகள் ஆரம்பிக்கும்போது வனத் துறையினர் யானைகள் வழித்தடம் என்று தடுத்துவிட்டார்கள் என்று சொல்கிறீர்கள். இந்த நிலையில், யானைகள் வழித்தடம் என்று அறிவித்த பின்பு, எந்தப் பகுதியிலும் நாம் எந்த* development*-ம் செய்யமுடியாத சூழ்நிலை உள்ளது என்பது உங்களுக்கே தெரியும். அதனால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அது யானைகள் வழித்தடம் என்பதால் வனத் துறையிடம் அனுமதி கேட்டு, ஆட்சேபணை ஏதும் இல்லை என்ற சான்றிதழைப் பெற்றுத் தந்தால், நிச்சயமாக வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்படும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 39, மாண்புமிகு உறுப்பினர் திரு. S. சதாசிவம், மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.*

39—

இராஜகோபுரம்

***51033—திரு. S. சதாசிவம்:** *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மேட்டூர் நகராட்சிப் பகுதியில் உள்ள அருள்மிகு மீனாட்சி சொக்கநாதர் மற்றும் ஞானதண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலுக்கு புதிய இராஜகோபுரம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரியிருக்கின்ற இந்தத் திருக்கோயில் 30 ஆண்டுகளுக்கு முன்பு குடமுழுக்கு நடத்தப்பட்ட திருக்கோயிலாகும். இந்தத் திருக்கோயிலில் தற்போது விமானங்கள்